# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,015 — 1933 ம் ஹூ ஐப்பசிமீ 27 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணிக்குத்தகை விற்பனவு.

கீழ் மாகாணத்தில் காணிக்குத்தகை விற்பனவு.

பின்னால் விபரிக்கப்படும் முடிக்குரிய காணித்துண்டை தென்னைச் செய்கைக்காக அரசாட்சியாரின் 99 வருடக் குத்தகையின் கட்டுப்பாடுகளின் பிரகாரம் 1933 ம் ஆண்டு (டிசம்பர்) மார்கழி மாசம் 9 ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஏலத்திற் கூறிவிற்பார். ஏற்படுத்திய குத்தகைக் கிரயத்தைக் கட்டத்தெரிபடும் கூடிய கேள்விக்காரனுக்கே குத்தகை கொடுக்கப்படும். குத்தகையின் நிபந்தனைகளும் இக்காணியின் மறு விபரங்களும் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசண்டரிடமும் இக்காணிகளின் படங்கள் அளவைக் கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதமபடம் இல. A 54. கிராமம்—வாகனேர. பற்று—சோறளை. டிஸ்திறிக்—மட்டக்களப்பு.

| துண்டு. இல. | காணிப் பெயர். | விபரம். | கேள்விக்காரன் பெயர். | விசாலம். ஏ. று. ப. | ஏற்படுத்திய குத்தகைக் கிரயம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. ச. | முதல் 30 வருடத்திற்கும் சட்டவேண்டிய வருடாந்த வாடகை ஏக்கர் ஒன்றுக்கு: முதல் 6 வருட வாடகை ஏக்கர் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு ரூ. ச. | முதல் 30 வருடத்திற்கும் சட்டவேண்டிய வருடாந்த வாடகை ஏக்கர் ஒன்றுக்கு: அடுத்த 24 வருட வாடகை ஏக்கர் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கண்டலடிப்பூமி | சிறுகாடு .. | என். கே. நல்லதம்பி, மட்டக்களப்பு | 9 2.38 | .. 2·80 | .. 0·60 | .. 1·80 |

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஹூ ஐப்பசிமீ 21 ந் திகதி.

ஆர். எம். லூர்ஸ்லி,
எக்றிங் காணிக் கொம்மிஷனர்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வட களுத்துறையில் ஓர் சிறு மின்சாரம் அமைக்கும் ஸ்தானத்தைக் கட்டும்பொருட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 170. குறிச்சி—டேசாஸ்ற, களுத்துறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | இலகப்பிற்றியாவத்தை 277 ம் வரி இலக்கத்தின் ஓர் பாதி, கொழும்பு ரோட்டு 7 ம் பிரிவு | ஏறக்குறைய 50 வயதான 1 தென்னைமரமும், ஏறக்குறைய 30 வயதான 2 மாவும், 3 கமுகும், 2 ஓட்டால் மேய்ந்த கல் வீடுகளும், உள்ள தோட்டம் | வட களுத்துறையிலிருக்கும் வீரவர்தன அலிசன் சில்வாவும், தெல்துவையிலிருக்கும் ஹெம்டத்திரிகே எமானிஸ் சில்வாவும், கொழும்பிலிருக்கும் விக்ரர் காசிச்செட்டியும், வட களுத்துறையிலிருக்கும் கலுவாதேவகே சில்விஸ் பிறனாந்தும், லீயப்போல் பிறனாந்தும், டன்ஸ்றன் பிறனாந்தும், ஐரீன் பிறனாந்தும், எலின் பிறனாந்தும் (கலுவாதேவகே மாட்டின் பிறனாந்துவின் பராயமற்ற பிள்ளைகள்) | 0 0 17·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஷு கார்த்திகை மாசம் 20 ந் தேதியிலன்று முற்பகல் 9·30 மணிக்கு களுத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1933 ம் ஷு ஐப்பசிமீ 23 ந் உ.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொத்தமல்லி வைத்திய உத்தியோகஸ்தருக்கு குடியிருக்கும் வீடு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிறதமபடத்து இல. A 113 குறிச்சி—தொறுவதெனிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கற்றபூல தோட்டம் | தேயிலை தேர்ப்பென்றைன் மரங்களும் | கற்றபூல தேயிலை கொம்பனியார், ஏசன்று, கொழும்பு ஜோர்ஜ் ஸ்ருவாட் கொம்பனியார் | 0 | 3 | 34·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஷு கார்த்திகைமீ 22 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு தலாவககெல வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1933 ம் ஷு ஐப்பசிமீ 23 ந் உ.

ஆர். எச். பெஸட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஓபனுக இடுகாட்டு வழிப்பாதை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதானபின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 201.–துண்டு 1. குறிச்சி—ஓபனுக.

| துண்டு. | காணியினதுபெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 428K | அம்பகாதென்னேகொடகேன | சேனை | என். டீ. ஏ. பெரேருவும் மறுபேரும் | 0 | 0 | 3·5 |
| 447A | மில்லகாகும்புறேஹவிட்ட அல்லது மில்லகாகொடகேன | சேனை | கே. சியடோரிசும் மறுபேரும் | 0 | 0 | 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஷு கார்த்திகை மாசம் 18 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1933 ம் ஷு ஐப்பசிமீ 18 ந் உ.

என். ஜே. லடிங்ரன்,
சப்பிரகாம மாகாண உதவி அரசாட்சி ஏசண்டு

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

யாட்பாண டிஸ்றிக்கிலுள்ள கள்ளுக்குத்தகை விற்பனவு.

1929 ம் ஆண்டு சித்திரை மாதம் 12 ந் திகதியில் வெளிவந்த 186 ம் இலக்கத்தைக்கொண்ட மகுபான அறிவிக்கைக்கும், 1933–34 ம் ஆண்டுக்குரிய கள்ளுக்குத்தகை விற்பனவுக் கட்டுப்பாடுகளுக்கும் அமைய, 1934 ம் ஆண்டு தை மாதம் 1 ம் திகதி தொடக்கம், 1934 ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ந் திகதிவரையும் பின்னுற் காணப்படும் தவறணைகளில் சில்லறையில் கள்ளு விற்கும் உரித்தை வேண்டுவதற்கு "றெண்டர்" கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விப் பத்திரத்தோடு, ரூபா 100 வீதம் திறைசேரியில் அல்லது கச்சேரியில் வைப்புப்பணங்கட்டி அதற்கறிகுறியாக வேண்டிய பற்றுச்சீட்டை அணைத்துவிட வேண்டும். கேள்விப் பத்திரக் கடுதாசி கச்சேரியிற் பெற்றுக்கொள்ளலாம்.

3. ஏதாவது ஒரு தவறணைக்கு ஒருவர் ஒரு கேள்விப் பத்திரத்துக்கு மேல் போடக்கூடாது.

4. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தையும் ஒரு என்வெலப்பில் அடைத்து அந்த என்வெலப்பின் இடது மேற்புறத்தில் கேள்வி கேட்கப்படும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் எழுதி விடவேண்டும்.

5. "றெண்டர்" கேள்விகள் குறைவாயிருந்தால் தவறணைகளை ஏலத்தில் விற்கும் உரித்துக் கவுண்மேந்து ஏசென்றருக்குண்டு.

6. உரித்தைக்கொண்ட கொள்வனவுகாரன் இன்னாரென்று அறிவிக்கப்பட்டவுடனே, அவர் கட்டுப்பாட்டுக் கொந்திசுகளுக்குக் கையொப்பமிட்டு கவுண்மேந்து ஏசென்றரிடம் உரித்தின் இரண்டு மாதக் குத்தகையளவான ஓர் தொகையைப் பிணைப் பணமாகக் கட்டவும் வேண்டும்.

7. கொந்திசுக் கட்டுப்பாடுகளையும் வேறு வேண்டிய விபரங்களையுங் கச்சேரியிற் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

8. கேள்விப்பத்திரங்கள் 1933 ம் ஆண்டு கார்த்திகைமீ 27 ந் திகதி, திங்கட்கிழமை காலை 11 மணி வரையிலுங் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும் அந்நேரம் கேள்விக்காரர்கள் கச்சேரியில் சமுகமளிக்க வேண்டும்.

ஆர். ஜே. உவில்க்கின்சன்,
கவுண்மேந்து ஏசென்றருக்காக.

யாட்பாணங் கச்சேரி,
1933 ம் ஆண்டு ஐப்பசிமீ 24 ந் உ.

தவறணைகளின் விபரம்.

| நெம்பர். | பெயர். | பகுதி. |
|---|---|---|
| 27 | பரந்தன் | கரைச்சி |
| 28 | கண்டாவளை | ஷை |

குறிப்பு :—இந்தத் தவறணைகள் காலை எட்டு மணிக்குத் திறக்கப்பட்டு மாலை ஆறரை மணிக்கு மூடப்படல் வேண்டும்.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

இத்தால் சகலருமறிய வேண்டியது முல்லைத்தீவு செல்லையா தம்பையா ஆகிய நான் முல்லைத்தீவில் இருப்பிடமும் அங்தோரும் வைத்து முல்லைத்தீவு டிஸ்திரிக் முழுவதிலும் தமிழ் பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடாத்த ஏற்றுக்கொள்ளும்படி பதிவு காரியகர்த்தருக்கு இன்று தொடக்கம் மூன்று மாதத்தின்பின் விண்ணப்பஞ்செய்ய எண்ணி இருக்கிறேனென விளம்பரம் செய்கிறேன்.

இங்ஙனம்,
செ. தம்பையா.

முல்லைத்தீவு, 1933 ம் ஆண்டு ஐப்பசிமீ 2 ந் உ.

---

காலி டிஸ்திரிக்கைச்சேர்ந்த வெந்தோட்டை வாசியான நல்லகாற இல்லம்பகே புத்ததாச சேனறத்ன ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் கட்டளைச் சட்டத்தின் 1 B (2) செக்ஷன் பிரகாரம் நான் பதிவுத்தலைவரை (Registrar General) வடமத்திய மாகாணத்திலுள்ள தம்மன்கடவை டிஸ்திரிக்கைச்சேர்ந்த பொலனறுவைப் பகுதியில் சிங்கள பாஷை நொத்தாரிஸ்சுவாக என்னைப் பதிவுசெய்யும்படி கேட்க எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு,
என். எச். பி. சேனாரத்ன,

வெந்தோட்டை,
1933 ம் ஆண்டு ஐப்பசிமீ 29 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.